**sns academy**

**an International CBSE Finger Print School**
**Coimbatore**

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!

வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!•

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

வினாக்கள் :

1.இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ________ ஆகும்.

2.இப்பாடலின் ஆசிரியர் பெயர் ___________.

3.பொருள் தருக. நிரந்தரம் =

பணித்தாள் / கோமதி & கிருஷ்ணபிரியா / தமிழ்த்துறை

4.பொருள் தருக. வண்மொழி =

5.மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் _________.

6.பொருள் தருக. இசை = __________.

7.என்றென்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

8.வானமளந்தது என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

9 அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________.

10. தமிழ்மொழி வாழ்த்து" – இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்கள் எவையேனும் இரண்டினை எழுதுக..

11.பாரதியார் பிறந்த ஊர் ________ ஆகும்.

12.பாரதியார் நடத்தி வந்த இதழ்களின் பெயர்களை எழுது.

13.சந்திரிகையின் கதை என்பது ______ நூலாகும்.

14.பொருள் தருக. வையகம் =

15.வளர்மொழி என்பது ________ மொழியைக் குறிக்கின்றது.